380

உ


சிவமயம்.

# திருக்கண்ணார் கோயில் வரலாறும், சைவ ஒழுக்கமும்.



MADRAS RECORD OFFICE
MADRAS

Q23:38.21193.T
N62



திருக்கண்ணார் கோயில்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# திருக்கண்ணார் கோயில் வரலாறும், சைவ ஒழுக்கமும்.



திருக்கண்ணார் தருமகர்த்தாக்கள்:

கண்டனூர்-சிவநேசச் செல்வர்

அ. சி. நா. சி. நா. பழனியப்ப செட்டியார்.

தெ. அரு. சித. கரு. ராம. ராமனாதன் செட்டியார்.

உ

சிவமயம்.

# திருக்கண்ணூர் கோயில் வரலாறு

### நேரிசை வெண்பா

திருக்கண்ணூர் கோயிற் சிவச்சுடரைப் போற்றுந்
திருக்கண்ணூர் வத்தாரமெய் சேருந்—திருக்கண்ணூர்
பொல்லாச்சார் பாணவம்போய்ப் பொன்னடிநீ ழற்குறிய
எல்லாச்சார் பும்பெறுவா ரே.

### இட அமைப்பு

திருக்கண்ணூர் கோயில் தஞ்சாவூர் ஜில்லா மாயவரந் தாலுக்காவில் வைத்தீசுவரன் கோயில் எனப்படும் புள்ளிருக்குவேளூர்க்குத் தென்கிழக்கில் ஒன்றரை மைலில் இருக்கும் ஒரு சிவதலம். இவ்வூருக்கு வைத்தீசுவரன் கோயில் ஸ்டேஷனில் இறங்கிச் செல்லவேண்டும். வண்டி வசதியுண்டு. பழவாற்றுப் பாய்ச்சலுடைய வளஞ்சிறந்த ஊர். திருஞானசம்பந்தப் பெருமான் "தெண்ணீர் மண்ணி வளஞ்சேர் வயல்மண்டி......சீர்திகழ் கண்ணூர் கோயிலே" என விளக்குகின்றார். சிறந்த நீர்வளமும் நிலவளமும் உடையதாயிருப்பதால் வாழ்க்கைக்கு நல்லதாக உள்ள திவ்வூர்.

### கோயில் அமைப்பு

இத்திருக்கோயிலின் காட்சி மிகஅழகானது. "கல்லியல் இஞ்சிமஞ்சு அமர்கண்ணூர் கோயில்" என்றருளிய சிறப்பால் உயர்ந்த அழகிய கருங்கற்களாலான திருமதில் திருஞானசம்பந்தர் காலத்திலேயே திகழ்ந்திருந்த செய்தியும் அதில் "முல்லை மல்லிகை மௌவல்" களின் தொடர்பும் இருந்தமையும் விளங்கும். கிழக்குநோக்கிய கருப்பக்கிரகத்தில் கண்ணாயிரேசுவரர் எழுந்தருளியிருக்கின்றார். அதனை அடுத்த அந்தராள மண்டபத்தில் போகசக்தி எழுந்தருளியுள்ளார். மகா மண்டபத்தில், சோமாஸ்கந்தர், விநாயகர்.

சுப்பிரமணியர் முதலிய ஐம்பெருங் கடவுளரும் சிவகாமியம்மையார் கண்டின்புறத் திருநடம்புரியுந் தில்லைக்கூத்தரும் திருவருள் பாலித்தருள்கின்றார்கள். அம்மை முருகுவளர் கோதையாரும் சிவபக்தர்கள் திருத்தலந் தரிசிக்கவரும் வழியைநோக்கி வரவேற்பவராய்த் தென்பால் நோக்கியருள்கின்றார். அம்பாள் சந்நிதியை அடுத்துப் பள்ளியறையும் கண்ணாயிரேசுவரர் முன்பு நந்திதேவர் பலிபீடம் துவஜஸ்தம்பமும் உள்ளன. கீழ்பால் பைரவர், சனீசுவரர், சந்திர சூரியர் முதலிய மூர்த்திகளும் தென்பால் தென்முகக் கடவுளும் மேல்பால் விநாயகர். அண்ணாமலையார் சுப்பிரமணியர், மகாலக்ஷ்மியும், வடபால் சண்டேசுவரரும் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் தென்பால் வடக்கு நோக்கியும் கோயில் கொண்டுள்ளார்கள். கோயிலின் கீழ்பால் திருக்குளமும் விநாயகர் சுப்பிரமணியராலயங்களும், வடகிழக்கில் திருப்பணி விடுதியும், தென்பாலும் மேல்பாலும், அக்ரஹாரமும், வடபால் சிப்பந்திகளின் வீடுகளும், திருக்குளத்தின் தென் கீழ்பால் திருநந்தவனமும் அமைந்துள்ளன.

இக்கோயில் இந்திரனுக்கு ஆயிரங்கண்களருளிய வரலாறுபற்றிக் கண்ணார் கோயிலெனப் பெயர் பெற்றது. மாவலிபாற் சென்று மூவடி மண் வேண்டிய வாமன மூர்த்தி என்னுங் குறுமாணி வழிபட்டதால் குறுமாணிகுடி எனப்பெயர் பெற்றது. அது குறுமாணக்குடி என மருவி வழங்குகின்றது.

## சுற்றியுள்ள தலங்கள்

இத்தலம் கிழக்கில் திருவெண்காடும், தென் கிழக்கில் திருக்கடைமுடியும், தெற்கில் திருவிளநகரும், தென்மேற்கில் திருநின்றியூரும், மேற்கில் திருப்புன்கூரும். வடமேற்கில் புள்ளிருக்குவேளூர் என்ற வைத்தீஸ்வரன் கோயிலும் வடக்கில் திருக்கோலக்கா, சீகாழியும், வடகிழக்கில் திருக்கலிக்காமூருஞ்சூழ நடுநாயகமாகத் திகழ்கின்றது.

## திருப்பணி

பாடல்பெற்ற சிவத்தலங்கள் யாத்திரை முறையாகச் செய்தவரும் சிவநேசர் திருக்கூட்டத்தில் ஆரம்பகால முதல் பல ஆண்டுகள் சீரியதொண்டு செய்தவருமான, இராமநாத புரம் ஜில்லா கண்டனூர் சிவநேசச் செல்வர் தெ. அரு. சித. கரு. இராமநாதன் செட்டியார் தமது பெரியதந்தையார் கருத்தின் வண்ணம் சிதைவுற்ற சிவாலயங்கள் பல தாமே நேரில் பார்த்துவந்த முறையில் இத்தலத்தைத் கண்ணுற்று இது மிகவும் கிலமாக இருந்தமையால் இதையே திருப்பணி செய்யவேண்டுமென்று பெரிய தந்தையார்க்கு அறிவித் ததின்பேரில், மேற்படி சிவநேசச்செல்வர்களான தெ. அரு. சித. குடும்பத்தாராலும், அ.சி.நா.சி. குடும்பத்தாராலும், (215625) ரூபாய்கள் செலவில் அழகுறத் திருப்பணி செய்யப்பெற்று (16250) ரூபாய்கள் செலவில் யுவஹு ஆனிமீ 24உ அஸ்த நன்னாளில் மகா கும்பாபி ஷேகம் செய்யப்பெற்றும், சுபகிருதுஹு ஆவணிமீ 4உ (20-8-62) திங்கள்கிழமை ரேவதி நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் கோயில் கோபுரங்கள் பூருவும் பழுதுபார்த்து ஆயில்பெயிண்ட் செய்து ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது.

## திருவாபரணாதிகள்

சுவாமி, அம்மன், விநாயகர், சுப்பிரமணியர், மகா லட்சுமி, தில்லைக்கூத்தர் முதலிய எல்லா மூர்த்திகட்கும் வெள்ளிக் கவசங்கள், நாகாபரணம் முதலியவும், திருமாங் கல்யங்களும், மரத்தாலாய ரிஷபம், பிரதோஷ ரிஷபம், பெருச்சாளி, மயில் முதலிய வாகனங்களும், கேடகமும், பள்ளியறைக்குப் பல்லக்கும் திருப்பணிச் செல்வர்களால் செய்துவைக்கப் பெற்றுள்ளன.

## பசு மடம்

திருப்பணிச் செல்வர்களால், பசுமடம் அமைத்து, தினமும் நான்கு காலங்களிலும் பாலாபிஷேகம் செய்யப் பெறுகிறது.

## திருக்குளம்

ஆலயத்துக்கு முன்பாக உள்ள திருக்குளம் இராம நாதபுரம் ஜில்லா ஆத்தன்குடியைச் சார்ந்த முத்துப் பட்டணம் சிவநேசச்செல்வர் சித.மு.நாரா.நா. நாச்சியப்ப செட்டியாரால் (25800) ரூபாய் செலவில் புதுப்பித்துக் கும்பாபிஷேக தினத்தில் தடாகப் பிரதிட்டை செய்யப் பெற்றும் குளத்தின் மேல்கரையில் விநாயகர், சுப்பிர மணியர், கோயில் தனித்தனியே கட்டிக் கும்பாபிஷேகம் செய்தும் அழகுறத் திகழ்கின்றது.

## நந்தவனம்

ஆலயத்திற்கும் திருக்குளத்திற்கும் தென் கீழ்ப்பாகத் தில் இராமநாதபுரம் ஜில்லா பள்ளத்தூர் சிவநேசச்செல்வர் அள. சுப. சுப்பிரமணியஞ் செட்டியாரால், நல்ல விஸ்தீர ணமுள்ள இடத்தில் நந்தவனம் அமைப்பித்து நாடோறும் ஏராளமான புட்பங்கள் எடுத்து வந்து சாத்தப் பெறு கின்றன.

## வாமனமூர்த்தி வழிபட்டது

மாவலி மன்னன் மண்ணும் விண்ணும் தன் ஆட்சிக்கு உட்படச் செய்து ஆண்டு வந்தான், அதுபற்றித் தேவர் முறையிடத் திருமால் காசிபமுனிவனுக்கு அதிதியினிடத்து வாமனமூர்த்தியாக அவதரித்தார், வேண்டுவார் வேட் கையின் மேற்பட ஈயும் பெருவள்ளலான மாவலியை மூவடிமண் வேண்டுமென் இரந்தார். அப்போது அவன் தந்தேன் என்ருன். அசுரகுருவான சுக்கிரன் இவ்வாமன வடிவம் வஞ்சகமானது, உலகம் உண்டபெருவாயன் இவன் நீ யிசையாதே எனத்தடுத்தான். அதற்கு அம்மன்னன் அத்தகைய மாயோனது கைதாழ என்கை உயரஈயும் இதை விடச் சிறந்த பேறு யாது என்று களித்து மூவடி அளந்துகொள் என்ருன். ஓரடிக்கே உலகம் பற்ருது போயிற்று என்னும்படி வாமனமூர்த்தி மண்ணை அளந்தார்.

பின் விண்ணளவும் ஓங்கி உயர்ந்து விக்கிரமூர்த்தியானார். விண்ணையும் சிறிதென ஒடுக்கி இடமின்றித் திருவடி மீண்டது. மூன்றுவதடிக்கு அம்மாவலியின் முடி இடமாயிற்று. இவ்வாறு செய்து மாவலியை அடக்கி இந்திரனுக்கு விண்ணுலக காட்சி கொடுத்த திருமால் வழிபட்டு வீடுபெற்ற காரணத்தால் குறுமாணிகுடி என்று வழங்குகிறது. இதனை இத்தலத்துத் தேவாரப் பதிகம், ஐந்தாந்திருப்பாட்டால் "குறுமாணுருவன் தற்குறியாகக் கொண்டாடுங் கறுமா கண்டன் மேயது கண்ணார் கோயிலே" என்று விளக்குகின்றது.

112900

## இந்திரன் வழிபட்ட வரலாறு

முன்னொரு காலத்தில் தேவேந்திரன் கௌதமமுனிவன் வெளியிற் செல்லுங்காலத்தை நோக்கி அம்முனி பத்தினியான அகலிகையைச் சேர்ந்தான். முனிவனை வெளியே போக்கவும் அகலிகையைச் சேரவும் இந்திரன் தக்க சூழ்ச்சி செய்தான், முனிவரது வடிவத்தையே கொண்டு சென்று கூடி இன்பம் அனுபவித்தபோது, சேர்ந்தவன் தன் கணவன் அல்லன் எனத் தெரிந்தும் அவள் அது தக்கதன்று எனக் கருதாமல் தானும் அதற்கு இசைந்து இருந்தாள். முனிவன் திரும்பிவந்துவிட்டான். அகலிகை அஞ்சி நின்றாள், புரந்தரன் பூனையானான். அம்முனிவன் அந்நிகழ்ச்சியை யுணர்ந்து "ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறி உனக்குண்டாகுக" என்று இந்திரனைச் சபித்தார். இந்திரன் யாவரும் நகைக்க பழியும் நாணமுங் கொண்டு சென்ற பின்பு அகலிகையை நோக்கிக் கல்லாகும்படி சபித்தார். கல்லாய் விழ இருக்கும் அவள் அதற்கு முடிவு அருளும்படி உடனே வேண்டினாள். அப்போது அம்முனிவன் இராமனது திருவடிப்பொடிபட்டதும் "இக்கல்வடி வொழிக" வென்று சாப

விடையும் அருளினுன். சாபவிடை பெருமல் சாபம்மட்டும் பெற்றுச் சென்ற இந்திரன் திருக்கண்ணூர் கோயில் எனப் படும் இச்சிவதலத்தில் இறைவனை வழிபட்டுப்பேறு எய்தி னுன். அச்சாபந் தீர்ந்து ஆயிரங்குறிகளும் ஆயிரங்கண்க ளாக மாறப்பெற்ற காரணத்தால் கண்ணூர் கோயில் கண் ணுயிரேசுவரர் என்று திருப்பெயர்கள் வழங்கப்பெற்றன. இவ்வரலாறு இத்தலத்துத் தேவாரப் பதிகம் ஏழாந்திருப் பாட்டால் குறிக்கப்பட்டுள்ளது.

### இலக்கியம்

இத்தலத்துக்கு திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகம் ஒன்றும். திருநாவுக்கரசர் அடைவு திருத்தாண்டகத்தில் ஒரு பாசுரமும் சேக்கிழார் பாடிய பெரியபுராணத்தில் ஒரு பாசுரமும் ராமலிங்க சுவாமிகள் பாடிய அருட்பா ஒன்றும் உள்ளது. அதனை முடிவிற்காண்க.

## சைவ ஒழுக்கம்

உயிர்கள் பிறப்பிற்கும் இறப்பிற்கும் அஞ்சி வீட்டை பெற்று உய்யும் விருப்பம் அடைதல் வேண்டும். அவ்விருப் பம் மிகுந்துவர, இப்பொருள் அழியாதது, இப்பொருள் அழிவது என்னும் உணர்வு தோன்ற வேண்டும். அவ் வுணர்வு தோன்றுவதற்கு மனத் தூய்மை பெறவேண்டும். அம்மனத் தூய்மையைப்பெற ஒழுக்கம் அவசியமானது. ஒழுக்கம் இல்லாதவர்க்கு மனத்தூய்மை வாய்ப்பது அரிது. மனத்தூய்மை அடையாதவர்க்கு அழியாப் பொருள் அழி பொருள் வன்று பகுத்துணரும் ஆற்றல் உண்டகாது. அவ்வாற்றல் பெற்று அவ்வாறு பகுத்துணராதவர்க்கு வீடு, பெறவிருப்பந் தோன்ருது. அவ்விருப்பம் இல்லாதவரே பிறந்தும் இறந்தும் உழல்வர். பிறவாமை வேண்டும்.

சைவர் ஒவ்வொருவரும் சைவ ஒழுக்கம் மேற்கொண்டு ஒழுகி மனத் தூய்மை அடைந்து முற்கூறிய பகுத்துணர்வு உற்று அழியாப் பொருளென சிவாநந்தத்தைப் பெற்று உய்யும் வேட்கை அடைதல் வேண்டும்.

ஒவ்வொரு சமயத்தாரும் தாம் மெய்யென்றுகொண்ட சமயஒழுக்கத்தை மேற்கொண்டால்தான் அச்சமயத்தின் பயனை அடைவர். ஒழுக்கம் அதற்குரிய அறிவு உடையார்க்கே வாய்க்கும். அவ்வறிவும் ஒழுக்கம் உணர்த்தும் நூலைக்கற்றல்தான் உதிக்கும். ஒழுக்க நெறி நூல் கற்று அறிவு பெற்றுள்ளவர்க்கே ஒழுக்கம் உண்டாகும். பின் ஒழுக்கத்துக்கு உரிய பயனும் உண்டாகும்.

உலகில் ஒரு தலைவனிடம் பணிசெய்து பயன்பெறவிரும்புவோர் அத்தலைவன் கட்டளைப்படி செய்தால், தாம் செய்த பணிக்கேற்ற பயனைப் பெறுவர். மீறிச் செய்வோர் பயன் பெறுமல் ஒழிவதோடு அவனுல் முனியப்பட்டுத் தண்டனையும் அடைவர். அதுபோல, சைவ சமயத் தலைவனுக்கு அடங்கி ஒழுகத் தக்க உயிர்களாகிய நாம் அவனுடைய கட்டளையான வேதாகம விதிப்படி ஒழுகினுல் பயனடைவோம். தவறினுல் பயனையும் இழப்போம். நரக தண்டனையும் பெறுவோம்.

சைவ ஒழுக்கம் அவரவர் நிலைக்கும் நெறிக்கும் ஏற்ப வெவ்வேறு வகைப்படும். எனினும் எல்லோருக்கும் பொதுவாக உள்ள ஒழுக்கம் இதில் சுருக்கி சொல்லப்படும்.

ஒவ்வொருவரும் விடியுமுன் 'சிவ சிவ' என்று சொல்லிக் கொண்டே எழுந்திருத்தல் வேண்டும். ''சித்தம் ஆரத் திருவடியே உள்கி நினைந்து எழுவார் உள்ளம் ஏயவன் காண்'' என்றருளிய திருநாவுக்கரசு நாயனுர், ''சேயவன் காண் நினையார்க்கு'' என்று நினையாதவர்க்குச் சிவனருள்

இல்லை என்பது விளங்க உணர்த்தியருளியதும் காண்க, படுக்கையறையுள் வைத்துக்கொண்ட நீரால் வாய்கொப் புளித்து முகம் கழுவி இயன்ற அளவு தூய்மை செய்து கொண்டு, முத்தியில் விருப்பம் உடையவரும் முத்தியிலும் போகத்தினும் விருப்பமுடையவரும் வடக்கு நோக்கியும், போகத்தில் வேட்கையுடையவர் கிழக்கு நோக்கியும் இருந்து விதிப்படி திருவைந்தெழுத்தை ஜபஞ்செய்ய வேண்டும். தீக்ஷை பெருதவர் சிவநாமங்களை உச்சரித்தல் வேண்டும். ஜபத்துக்கு முன்னும் பின்னும் திருநீறு அணிதல் வேண்டும். அணியும்போது சிவநாமத்தைச் சொல்லிக் கொண்டே அணிதல் வேண்டும். "திருவாய் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்" என்ற இடத்தில் இவ் விதி விளங்கக் காணலாம். பிறகு சிவபெருமான் முதலி யோரைக் குறித்த சிலபாடல்களை நன்கு ஓதுதல் வேண்டும். பின் சமயாசாரியர்களையும் சந்தானுசாரியர்களையும் அறு பத்துமூவர்களையும் சேக்கிழார் சுவாமிகளையும் குருவையும் முறையே எண்ணிப் பாடுக. பின் ஞானத்தாலும் ஒழுக்கத் தாலும் மேம்பட்ட பெரியோர்களையும் அருளாளர்களையும் நினைக்க. சைவம் வளர்த்த தாயாரான இசைஞானியர் (அந்தணர்) மங்கையர்க்கரசியார் (அரசர்) காரைக்கா லம்மையார் (வணிகர்) திலகவதியார் (வேளாளர்) என்னும் நால்வர் திருவடிகளையும் போற்றுக.

பின்பு அன்று செய்ய இருக்கும் தொழில் முறைகளையும் அவற்றைச் செய்யும்போது வரும் நலம்பொலங்களையும் இடையூறு நேரின் போக்கும் வழியையும், அத்தொழில் முடிவையும் பயனையும் ஆய்ந்து வகுத்துக்கொள்க. பின்.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்:
வீழ்க தண்புனல்: வேந்தனும் ஓங்குக:
ஆழ்க தீயது: எல்லாம் அரன்நாமமே
சூழ்க: வையகமும் துயர் தீர்கவே"

என வாழ்த்தித் திருநீறிட்டுப் புறப்படுக. இவ்வாறு தனித்தும் வீட்டிலுள்ளவரோடும் தோத்திரம் செய்தல் நன்று.

வெளிவந்த பின்பு காலைக் கடன்களைக் கழித்துத் தூய்மை செய்துகொண்டு, பல் விளக்கி, வாய் முதலியன கழுவிக்கொண்டு, தண்ணீரில் முழுகி, உலர்ந்த ஆடை உடுத்துக்கொள்க. முழுகும்போது சங்கற்பம் செய்க. சிவன் திருப்பெயர்களைக் கூறுக. முழுகியபின் அநுட்டானம் செய்க. பின் வீட்டிலுள்ள விநாயகமூர்த்தி முதலியவரைப் பூஜிக்கவும். சிவபூஜை செய்யவும் நன்னீரும், நன்மலரும், அறுகும் இலைகளும் (பூஜா விதியிற் கூறப்பட்டவை) கொண்டு வருக. பூஜை செய்க. பூஜை ஜபம் தோத்திரம் ஆகிய வழிபாட்டு நிகழ்ச்சிகளை விபூதியும் உருத்திராக்கமும் இன்றிச் செய்தல் கூடாது. "பூணுது கண்டியினைப் பூஜைபுரி வார் பலத்தைக் காணுர் எனவே கழறு" ஷ காலங்களில் வேறு எண்ணங்களை ஒழித்து. அம்மையப்பரை மறவாமல் இருத்தி மனத்தைக் காக்க வேண்டும். மந்திரத்தால் வாக்கைக் காக்கவேண்டும். கண்ணை உண்முகமாக்கியும் மற்றைய உறுப்புக்களைத் தக்கவாறு அமைத்தும் காயத்தைக் காக்க வேண்டும். இன்றேல், மனம் வேறு சொல் வேறு மன்னு தொழில் வேறுபட்டு, பயனும் இன்றித் துன்பமும் அடைய நேரும். ஜபம் முதலியவை செய்து முடித்த பின்பு குரு முதலியோரை நினைந்து துதிக்க வேண்டும். அம்மையப்பர், விநாயகர், முருகர், குரு (சமய குரவர்—சந்தான குரவர், உபதேச குரு) இவர்களை எப்போதும் தவருமல் துதிக்க வேண்டும். ஜபமும் தியானமும் தோத்திரமும் பூஜையும் செய்ய வல்லவர்க்குத் திருவருள் இனிது வாய்க்கும். தோத்திரங்களுக்குத் திருமுறைகளே தக்கவை. தேவாரம், திருவாசகம், திருவிசையப்பா, திருப்பல்லாண்டு, பெரிய

புராணம் என்னும் ஐந்தும் பஞ்சபுராணமெனத் தவருமல் கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றையே தோத்திரங் கட்குக் கொள்ளவேண்டும். பன்னிரு திருமுறைகளேயும் பாராயணம் செய்க. அவற்றைப் பூஜித்து வருக.

காலந்தோறும் சிவாலய தரிசனம் செய்க. சமயாசாரியார் சந்தாஞசாரியர் திருநாட்களைக் கொண்டாடுக. அப்போது அவர்கள் பெருமைகளை உலகோர் அறியச் சொற்பொழிவு முதலியவற்ருல் பரவச்செய்க. சிவத்தொண்டும் சிவனடியார் தொண்டும் செய்துவருக. உடம்பின் நிலைக்கு ஏற்றவாறு விரதங்களை மேற்கொள்க. மேற்கொண்ட விரதங்களைக் காத்து வருக. ''காப்பது விரதம்'' நாம் விரதத்தைத் தவருமல் காத்துவரின் அது நம்மைக் காத்து வரும். விரதத்தை மேற்கொண்டவர்க்கு ஆயுள், ஆரோக்கியம் முதலிய நலங்கள் மிகுந்திருத்தல் கண்கூடு.

பொறுமை, கல்வி, உண்மை, தூய்மை ஐம்பொறி, யடக்கல், அடக்கம், உறுதி, நாணம், கோபமின்மை, களவு செய்யாமை, திருநீறு, சிவசின்னம், சிவபூஜை, தியானம் என்னும் பதினன்கும் சைவர்க்கு மிக்க அவசியமானவை.

பொறுமை கல்விமெய் தூய்மைஐம் பொறிதெறல் அடக்கம்
உறுதி நாண்வெகு ளாமைகள் ளாமைஒண் பூதி
மறுவில் சாதனம் சிவார்ச்சனே தியானம்வண் பதினன்
கறமும் நல்லறம் புரிபவர்க் கிலக்கணம் ஆமால்.

(காஞ்சிப் புராணம், ஒழுக்கம், 67.)

தீய வழியிற் பொருள் தேடாமல், நல்ல வழியில் தேடி உடலைக் காத்து, உண்மை நூல்களைப் பயின்று, உரிய ஒழுக் கத்தில் நின்று ஐவகை வேள்விகளை இயன்ற அளவு செய்து வாழவேண்டும்.

பெரியபுராணம் கந்தபுராணம் திருவிளையாடற் புராணம் காஞ்சிப்புராணம் முதலியவற்றை ஆயுள் முடிவுவரைக்கும்

தவருமல் மீண்டும் மீண்டும் பாராயணம் புரிதல் வேண்டும். அவற்றையும் சைவசித்தாந்த நூல்களையும் கற்கவும் கேட்கவும் சிந்திக்கவும் தெளியவும் வேண்டும். தெளிந்த வாறு நிற்றல் வேண்டும்.

உணர்வு பெருக்கிக்கொள்ள உணவுகொள்ளவேண்டும் உடலைமட்டும் ஓம்ப உதரத்தை நிரப்பி, "இடும்பைக்கு இடும்பை" யாக்கலாகாது. இருவேளை உணவு போதும். காலதேசவர்த்தமானத்துக்கு ஏற்பவும் அவரவர் செயலுக்கு ஏற்பவும் புலால் ஒரு சிறிதுங் கலவாத பரிசுத்த உணவைப் போதிய அளவு (அறிவைக் கெடுத்துக் கொள்ளாதபடி) தேர்ந்து கொள்ளவேண்டும். உணவுக்கு முன்னும் பின்னும் திருநீறு இடமறத்தலாகாது. எவ்வெவர் எத்தொழிலைச் செய்தாலும் இறைபணி நிற்றல் வேண்டும். அது செய்யப் பழகவேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.

மாலையில் உடற்றூய்மை இயன்ற அளவு செய்துகொண்டு திருநீறு உருத்திராக்கம் அணிந்து அநுட்டானம் ஜபம் தோத்திரம் முதலியன செய்க. சிவாலய தரிசனம் பண்ணுக உணவு கொள்க. உலாவுக. உறங்குமுன்பு தியானம் புரிக. ஜபம்செய்க. சிவசிந்தனையுடன் படுத்தல் வேண்டும். அன்றுடம் தாம் செய்துவரும் பிழைகளைக் கணக்கிட்டுச் சிறிது சிறிதாகவேனும் குறைத்துக்கொண்டு வரவேண்டும். "வாய்மை திறம்பா வாகீசர் திருமடத்தில் ஒருபால் அணைந்து பேழ்கணித்து (பிழை கணித்து) மருவும் உணர்வில் துயில் கொண்டார்" (பெரிய புராணம். திருநா, 275) வைகறைத் துயிலெழுக.

இவற்றை ஆடவரும் பெண்டிருமாகிய சைவரனைவரும் ஒழுக்கங்களாக மேற்கொண்டொழுகி நலம் பெறுக.

ஆறுமுக நாவலர் எழுதிய சைவ வினு விடைகளையும் "சைவ சமய நெறி" உரையையும் கற்க வேண்டும். ஒவ்வொருவர் வீட்டிலும் திருமுறைகளையும் சித்தாந்த சாத்திரங்களையும் வைத்துப் பூஜித்து வரவேண்டும். அவற்றை நாடோறும் குறித்துக்கொண்டவேளையில் தவருமல் கற்றறிய வேண்டும். கற்க இயலாதவர் போற்றுதலையாவது செய்து வரவேண்டும்.

"ஒழுக்கம் அன்பரு ளாசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவந் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவடக்கம் அறிவொடர்ச் சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனல் இரங்குவான் பணி யறங்கள்."

(சிவஞான சித்தியார் 113)

## முதற்றிருமுறை-திருக்கண்ணர் கோயில்-பண் குறிஞ்சி

### திருச்சிற்றம்பலம்

தண்ணர் திங்கள் பொங்கர வம்தாழ் புனல்சூடிப்
பெண் ஆண் ஆய பேரரு ளாளன் பிரியாத
கண்ணர் கோயில் கைதொழு வோர்கட் கிடர்பாவம்
நண்ணு வாகும் நல்வினை யாய நணுகும்மே. 1

கந்தமர் சந்தும் காரகி லும்தண் கதிர்முத்தும்
வந்தமர் தெண்ணீர் மண்ணி வளஞ்சேர் வயல்மண்டிக்
கொந்தலர் சோலைக் கோகிலம் ஆடக் குளிர்வண்டு
செந்திசை பாடுஞ் சீர்திகழ் கண்ணர் கோயிலே. 2

பல்லியல் பாணிப் பாரிடம் ஏத்தப் படுகானின்
எல்லிந டஞ்செய் ஈசனெம் மான்தன் இடமென்பர்
கொல்லையின் முல்லை மல்லிகை மௌவற் கொடிபின்னிக்
கல்லியல் ஞஞ்சி மஞ்சமர் கண்ணர் கோயிலே. 3

தருவளர் கானந் தங்கிய துங்கப் பெருவேழம்
மருவளர் கோதை அஞ்ச உரித்து மறைநால்வர்க்
குருவளர் ஆல நீழல்அமர்ந்தீங் குரைசெய்தார்
கருவளர் கண்ணூர் கோயில் அடைந்தோர் கற்றோரே.

மறுமாண் உருவாய் மற்றிணை யின்றி வானோரைச்
செறுமா வலிபாற் சென்றுல கெல்லாம் அளவிட்ட
குறுமாண் உருவன் தற்குறி யாகக் கொண்டாடும்
கறுமா கண்டன் மேயது கண்ணூர் கோயிலே. 5

விண்ணவ ருக்காய் வேலையுள் நஞ்சம் விருப்பாக
உண்ணவ னைத்தே வர்க்கமு தீந்தெவ் வுலகிற்கும்
கண்ணவ னைக்கண் ணூர்திகழ் கோயிற் கனிதன்னை
நண்ணவல் லோர்கட்கில்லைந மன்பால் நடலையே. 6

முன்னொரு காலத் திந்திரன் உற்ற முனிசாபம்
பின்னொரு நாள்அவ் விண்ணவர் ஏத்தப் பெயர்வெய்தித்
தன்னரு ளால்கண் ஆயிரம் ஈந்தோன் சார்பென்பர்
கன்னியர் நாளும் துன்னமர் கண்ணூர் கோயிலே. 7

பெருக்கெண் ணாத பேதை அரக்கன் வரைக்கீழால்
நெருக்குண் ணாத்தன் நீள்கழல் நெஞ்சில் நினைந்தேத்த
முருக்குண் ணாதோர் மெய்கதிர் வாள்தேர் முன்ஈந்த
திருக்கண் ணூர்என் பார்சிவ லோகம் சேர்வாரே. 8

செங்கம லப்போ தில்திகழ் செல்வன் திருமாலும்
அங்கம லக்கண் ணோக்கரும் வண்ணத் தழலானான்
தங்கம லக்கண் ணூர்திகழ் கோயில் தமதுள்ளம்
அங்கம லத்தோ டேத்திட அண்டத் தமர்வாரே. 9

தாறிடு பெண்ணைத் தட்டுடை யாருந் தாம்உண்ணும்
சோறுடை யார்சொல் தேறன்மின் வெண்ணூல் சேர்மார்பன்

923:38-21193·T
N62



ஏறுடை யன்பரன் என்பணி வான்நீள் சடைமேல்ஓர்
ஆறுடை அண்ணல் சேர்வது கண்ணார் கோயிலே. 10

காமரு கண்ணார் கோயில்உளானைக் கடல்சூழ்ந்த
பூமரு சோலைப் பொன்னியல் மாடப் புகலிக்கோன்
நாமரு தொன்மையுள் ஞானசம் பந்தன்
பாமரு பாடல் பத்தும்வல் லார்மேற் பழிபோமே. 11

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு நாயனார்-திருஅடைவு திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன் செம்பங்குடி
நல்லகுடி நளிநாட்டி யத்தான்குடி
கற்குடி தென்களக்குடி செங்காட்டங்குடி கருந்திட்டைக்குடி
கடையக்குடி காணுங்கால்
விற்குடி வேள்விக்குடி நல்வேட்டைக்குடி வேதிகுடி
மாணிக்குடி விடைவாய்க்குடி
புற்குடி மாகுடி தேவன்குடி நீலக்குடி
புதுக்குடியும் போற்றவிடர் போகுமன்றே.

திருச்சிற்றம்பலம்

திருமறைச் சண்பையராளி சிவனார் திருக்கண்ணார் கோயில்
பெருவிருப்பாலணைந் தேத்திப் பிஞ்ஞகர் கோயில்பிறவும்
உருகியவன் பாலிறைஞ்சி உயர்தமிழ் மாலைகொண்டேத்தி
வருபுனற் பொன்னி வடபாற் குடதிசைநோக்கி வருவார்

சேக்கிழார் பாடல் 285

காவின்மருவுங் கனமுந்திசை மணக்கும்
கோவின்மருவு கண்ணார் கோயிலாய்

திருவருட்பா பாடல் 35

TAMIL NADU ARCHIVES LIBRARY
H 2900

ஸ்ரீ முருகன் பிரஸ், கண்டனூர்.